இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 16.09.2026

# துரோகிகளைத் தோற்கடியுங்கள்!

‘துரோகம் செய்தவர்களைத் தோற்கடியுங்கள் - கட்சியை பார்க்காதீர்கள்! துரோகமிழைத்தவர்களுக்குத் தக்க பாடம் புகட்டுங்கள்!” என்று மதுராந்தகம், தாராபுரம் தொகுதி மக்களுக்கு ஒரு முதியவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், “மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் வாக்களித்த மக்களுக்குத் துரோகம் இழைத்த த.வெ.க. வேட்பாளர்களைத் தோற்கடியுங்கள்! மூன்று மாதங்களுக்கு முன் தேர்தலில் வெற்றி பெற்று, பின்னர் கட்சி மாறி இப்போது மீண்டும் த.வெ.க. சார்பில் வாக்கு கேட்டு வருபவர்களை தோற்கடிப்போம்! இந்த இடைத் தேர்தலில் கட்சியைப் பார்க்காதீர்கள்! வாக்களித்து வெற்றி பெறச்செய்த உங்களுக்குத் துரோகம் இழைத்தவர்களுக்கு தக்க பாடம் புகட்டுங்கள்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

**இது சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது.**

மதுராந்தகம், தாராபுரம் தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர்க்க முடியாத நிலைமையில் வந்த தேர்தல் அல்ல. இது திணிக்கப்பட்ட தேர்தல் ஆகும். முதலமைச்சர் விஜய்யின் குதிரை பேரத்தால் தான் இந்த இடைத் தேர்தல் வந்துள்ளது.

**நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மதுராந்தகத்தில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட மரகதம் குமாரவேல் வெற்றி பெற்றார். தாராபுரத்தில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட சத்தியபாமா வெற்றி பெற்றார். இவர்கள் இருவரையும் ராஜினாமா செய்ய வைத்தார் விஜய். ‘மீண்டும் தேர்தல் வந்தால் நீங்கள் தான் வேட்பாளர்’ என்று ஆசை வார்த்தை கூறி - குதிரை பேரம் நடத்தினார். அவர்கள் சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகரனிடம் பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்துவிட்டு, ஐந்தாவது நிமிடத்தில் த.வெ.க.வில் இணைந்தார்கள். குதிரை பேரம் நடந்தது என்பதற்கு இதைவிட சாட்சியம் தேவையில்லை.**

இதனால் தான் இடைத்தேர்தல் வந்தது. யார் பதவி விலகினார்களோ, அவர்களையே வேட்பாளர்களாக அறிவித்துள்ளார் விஜய். இதுவும் பேரம் நடந்தது என்பதற்கான சாட்சியம் ஆகும். ‘மீண்டும் போட்டியிட வாய்ப்பு தரப்படும்’ என்ற பேரத்தை விஜய் நடத்தியதற்கு இதுவே ஆதாரம் ஆகும். இதைவிட அரசியல் மோசடி இருக்க முடியாது. இதைவிட மக்களுக்குத் துரோகம் இழைக்க முடியாது.

**இவர்கள் இருவர் மட்டுமல்ல; பெருந்துறை ஜெயக்குமார், அம்பாசமுத்திரம் இசக்கி சுப்பையா ஆகியோரும் தங்கள் சட்டமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலகினார்கள். விலகியதும் அ.தி.மு.க.வில் இருந்து விலகி த.வெ.க.வில் இணைந்தார்கள். இவர்களை பதவி விலக வைக்க வேண்டிய அவசியம் விஜய்க்கு ஏன் வந்தது?**

காங்கிரஸ் கட்சி ஆதரவு இருக்கிறது. இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஆதரவு இருக்கிறது. விடுதலைச் சிறுத்தைகள் ஆதரவு இருக்கிறது. இந்த மூன்று கட்சிக்கும் அமைச்சர் பதவி தரப்பட்டுள்ளதால் அவர்கள் கூட்டணியை விட்டு வெளியேற மாட்டார்கள். ஆட்சி மீது விமர்சனங்களைச் செய்து கொண்டே ஆட்சிக்கு ஆதரவைத் தந்து கொண்டுதான் இருக்கிறார்கள் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும். ஆனாலும் இந்தக் கட்சிகள் எதையும் விஜய் நம்பவில்லை. இவர்களால் தான் அவர் முதலமைச்சராக நீடிக்கிறார். ஆனாலும் இந்தக் கட்சிகளை நம்பத் தயாராக இல்லை. இதனால் தான் அ.தி.மு.க. உறுப்பினர்களை பல்வேறு பேரங்களின் மூலமாக பதவி விலக வைத்து இடைத்தேர்தலை உருவாக்கி அரசியலைக் குழப்பி வருகிறார் விஜய். இதைவிட இழிவான அரசியல் இருக்க முடியாது.

மாற்றத்தைத் தரப்போவதாகச் சொல்லும் விஜய், தனக்குப் பெரும்பான்மை இடங்களைத் தரவில்லை தமிழ்நாட்டு மக்கள் என்று சொல்லி பதவி ஏற்க விரும்பவில்லை என்று தவிர்த்திருந்தால் அது மாற்றம். அவரை யோக்கியர் என்று நம்பலாம்.

**‘தி.மு.க. கூட்டணிக் கட்சிகளை கல்லாப்பெட்டி கூட்டணி’ என்று சொன்னாரே அவர்களது ஆதரவைப் பெறாமல் இருந்திருந்தால் அவரை யோக்கியர் என்று சொல்லலாம்.**

**‘அ.தி.மு.க.வை ஊழல் கட்சி’ என்று விமர்சித்த அவர், அ.தி.மு.க. உறுப்பினர் 25 பேரின் ஆதரவை வாங்காமல் இருந்தாரா? இல்லை. அவர்கள் வாக்குகளைப் பெற்றுத் தான் பெரும்பான்மையை நிரூபித்தார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நால்வரை வலுக் கட்டாயப்படுத்தி பதவி விலக வைத்து, அந்த நான்கு தொகுதி வாக்காளப் பெருமக்கள் முகத்திலும் கரியைப் பூசினார் விஜய். அ.தி.மு.க. சார்பில் வென்றவர்களை தனது கட்சியில் இணைத்துக் கொண்டு அசிங்க அரசியலை சிரித்துக் கொண்டே செய்கிறார் விஜய்.**

மதுராந்தகம் மரகதம் குமாரவேல், தாராபுரம் சத்தியபாமா, பெருந்துறை ஜெயக்குமார், அம்பாசமுத்திரம் இசக்கி சுப்பையா ஆகிய நால்வரும் சட்டப்படி தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டியவர்கள். தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டியவர்களுக்கு தங்களது பதவியை ராஜினாமா செய்யும் உரிமை இல்லை என்பதே உண்மை ஆகும். பதவி விலகியது மட்டுமல்லாமல், மறுபடியும் அவர்கள் போட்டியிடுவதும் மிகமிகத் தவறானது ஆகும்.

**இவர்களது ராஜினாமாவை ஏற்பதாக முதலில் சொன்னார் பேரவைத் தலைவர். அந்த நான்கு தொகுதிகளும் காலி என்றும் அவசர அவசரமாக அறிவித்தார். பின்னர், ‘அந்த நான்கு பேருக்கும் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பி இருக்கிறேன்’ என்றார். இது அரசியல் அமைப்புச் சட்ட சிக்கலுக்கு உரியதாக மாறி வருகிறது. குதிரை பேரங்கள் நடப்பது தொடர்பாக சி.பி.ஐ. போன்ற புலனாய்வு அமைப்பு இதை விசாரித்தால் சிக்கல்கள் அதிகம் ஆகும். முதலமைச்சர் விஜய் உள்பட பல அமைச்சர்கள் இப்பிரச்சினையில் சிக்குவார்கள்.**

**அதற்கு முன்னதாக முதலமைச்சர் விஜய்யையும் குதிரை பேரத்தில் தொடர்புடைய வேட்பாளர்களையும் தண்டிக்க வேண்டிய கடமை மதுராந்தகம், தாராபுரம் மக்களுக்கு இருக்கிறது.**



தேனி வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆசிப் கான் ஏற்பாட்டில் அழகர்சாமி என்பவருக்கு மருத்துவ உதவி தொகையை தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளையிலிருந்து அழகர்சாமி அவர்களுக்கு மருத்துவ உதவி தொகையாக ரூபாய் 25 ஆயிரத்திற்கான காசோலை வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கத்தமிழ்ச் செல்வன் எம்.பி., முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கினார்கள். உடன் நகரச் செயலாளர் புருஷோத்தமன், கழக முன்னோடிகள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## கோவையில் தொடரும் பயங்கரம்!

# அரிவாளைக் காட்டி மிரட்டி 14 வயது சிறுமி பலாத்காரம்!

## ஒரே மாதத்தில் நடந்த 11 கொலைகளால் மக்கள் பீதி!

கோவை, செப். 16 -

கோவையில் 14 வயது சிறுமியை கடத்திச் சென்று அரிவாள் காட்டி மிரட்டி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். இது தொடர்பாக கைதான வாலிபர் ஆயுதத்தை மீட்கச் சென்றபோது பெண் இன்ஸ்பெக்டரை அரிவாளால் தாக்கி தப்பிக்க முயற்சித்தபோது, போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தி பிடித்தனர்.

கோவையை சேர்ந்தவர் 14 வயது சிறுமி நேற்று முன்தினம் இரவு வெளியே சென்றுவிட்டு வீடு திரும்புவதற்காக போத்தனூர் பகுதியில் காத்திருந்தார்.

அப்போது சிறுமிக்கு ஏற்கனவே அறிமுகமான வெள்ளலூரை அடுத்த மேட்டூர் பகுதியைச் சேர்ந்த சந்தோஷ் (24) மற்றும் அவரது நண்பர் கஞ்சிக்கோணாம்பாளையம் பகுதியைச் சேர்ந்த தவசி (28) ஆகியோர் பைக்கில் அங்கு வந்தனர். அவர்கள் சிறுமியிடம் தாங்கள் பைக்கில் வீட்டிற்கு அழைத்து செல்வதாக கூறியுள்ளனர். சிறுமியும் அவர்களுடன் பைக்கில் ஏறி சென்றுள்ளார்.

சிறிது தூரம் சென்றதும் தவசி திடீரென தான் மறைத்து வைத்திருந்த அரிவாளை காட்டி மிரட்டி தங்களுடன் வரும்படி கூறியுள்ளார்.

பின்னர் இருவரும் சிறுமியை கஞ்சிக்கோணாம்பாளையம் பகுதியில் உள்ள தவசி வீட்டிற்கு அழைத்து சென்றுள்ளனர். அங்கு இருவரும் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்தனர். பின்னர் சந்தோஷ் சிறுமியை அழைத்து சென்று அவரது வீட்டில் இறக்கிவிட்டு சென்றார். வீட்டிற்குள் சென்றதும் சிறுமி தனக்கு நடந்தவற்றை பெற்றோரிடம் கூறி அழுதுள்ளார்

இதை கேட்டு அதிர்ச்சி அடைந்த சிறுமியின் பெற்றோர் உடனே கோவை தெற்கு அனைத்து மகளிர் போலீசில் புகார் அளித்தனர். புகாரின்பேரில் போலீசார் உடனடியாக வழக்குப்பதிந்து விசாரணை நடத்தினர். நேற்று காலை சந்தோஷ், தவசி ஆகிய 2 பேரையும் கைது செய்து போலீஸ் ஸ்டேஷன் அழைத்து சென்றனர். பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவப் பரிசோதனைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கைதான தவசியிடம், சிறுமியை மிரட்டுவதற்குப் பயன்படுத்திய அரிவாள் குறித்து விசாரித்தனர்.

அப்போது அவர் கஞ்சிக்கோணாம்பாளையம் பகுதியில் உள்ள மயானம் அருகே அரிவாளை வீசி விட்டதாக தெரிவித்தார்.

இதையடுத்து அரிவாளை பறிமுதல் செய்ய தவசியை இன்ஸ்பெக்டர் சுவர்ண வள்ளி தலைமையிலான போலீசார் தவசியை சம்பந்தப்பட்ட இடத்திற்கு அழைத்துச் சென்றனர். அப்போது மறைத்து வைத்திருந்த அரிவாளைத் திடீரென எடுத்த தவசி, இன்ஸ்பெக்டர் சுவர்ண வள்ளியைச் சரமாரியாக வெட்டிவிட்டு அங்கிருந்து தப்பியோட முயன்றார்.

இதில் இன்ஸ்பெக்டருக்கு தோள்பட்டையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதை கண்டு அதிர்ச்சி அடைந்த அங்கிருந்த எஸ்.ஐ. சிலம்பரசன் தவசியை எச்சரித்தார். ஆனால் அதனை கண்டு கொள்ளாமல் மீண்டும் இன்ஸ்பெக்டரை அரிவாளால் வெட்ட முயன்றார். இதனால் இன்ஸ்பெக்டரின் உயிரைப் காப்பாற்ற எஸ்.ஐ. சிலம்பரசன் தான் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து சுட்டார். அதில் தவசியின் இடது காலில் குண்டு பாய்ந்து அவர் கீழே விழுந்தார்.

உடனே ஆம்புலன்சுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த தவசி மற்றும் இன்ஸ்பெக்டர் சுவர்ண வள்ளி ஆகியோர் கோவை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். இருவருக்கும் டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். சந்தோஷை சிறையில் அடைக்க போலீசார் நடவடிக்கை எடுத்துள்ளனர். கைதான இருவர் மீதும் வழிப்பறி போன்ற 3 வழக்குகள் இருப்பதும் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் கோவையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஏற்கனவே கோவை சூலூரில் 10 வயது சிறுமி பலாத்காரம் செய்து கொலை செய்யப்பட்டார்.

வடமாநில பெண்ணும் காட்டுப்பதியில் எரித்துக் கொலை செய்யப்பட்டார். பல பலாத்காரம் சம்பவங்கள் அரங்கேறி உள்ளது. இதுபோன்ற கடந்த ஒரு மாதத்தில் கோவையில் 11 கொலைகள் நடந்து உள்ளது. தொழில் நகரம் என்ற பெயர் பெற்ற கோவையில் தொடர் கொலை, பலாத்காரம் சம்பவங்களால் மக்கள் பீதியில் உள்ளனர்.

## சென்னையில்

# ‘இதழியல் களத்தில் பெரியார்’ நூல் அறிமுக விழா!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!

சென்னை, செப். 16 -

கருஞ்சட்டைப் பதிப்பகம் சார்பாக, பேராசிரியர் இரா.சுப்பிரமணி எழுதியுள்ள ‘இதழியல் களத்தில் பெரியார்’ நூல் அறிமுக விழா, நாளை (செப்.17, 2026 - வியாழக்கிழமை) மாலை 6 மணிக்கு, சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகம் (இரண்டாம் தளம்) அரங்கில் நடைபெறவுள்ளது.

**சுப.வீரபாண்டியன் அறிமுக உரையாற்றுகிறார்!**

குடிஅரசு, விடுதலை உள்ளிட்ட ஏடுகளில் வெளிவந்த பெரியாரின் 450க்கும் மேற்பட்ட கட்டுரைகளை உள்ளடக்கிய இந்த நூல், மூன்று தொகுதிகளாகவும், சுமார் 2500 பக்கங்களாகவும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலின் அறிமுக உரையை தோழர் சுப.வீரபாண்டியன் நிகழ்த்துகிறார்.

சிறப்புரையை தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், மேனாள் ஒன்றிய அமைச்சரான ஆ. இராசா எம்.பி. வழங்குகிறார்.

## தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (2026)

# திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிய பாசிச முதல்வர் விஜய்!

## தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு வீரமணி கண்டன அறிக்கை!

சென்னை, செப். 16 -

கழக மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் உயர் கல்வி என்பது ஒரு சிலருக்கு மட்டுமே கிடைக்கக் கூடிய வாய்ப்பாக இல்லாமல், சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்திலேயே திராவிட முன்னேற்றக் கழகம் கல்வியை சமூகநீதியின் முக்கிய கருவியாகக் கருதி வந்துள்ளது. அந்த வகையில், தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பான சட்டங்களில் செய்யப்படும் எந்த மாற்றமும், உயர்கல்வியின் தரம், அணுகல், கட்டணம் மற்றும் சமூகநீதி ஆகியவற்றை கருத்தில் கொண்டே மதிப்பிடப்பட வேண்டும். கல்வி சிலரின் வணிகம் அல்ல, அது அனைவரின் உரிமை.

தி.மு.க. ஆட்சியின் போது சட்டமன்றத்தில் VBSA மசோதாவை விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டு மாணவர்களுக்கு இம்மசோதா உகந்தது அல்ல என்று ரத்து செய்யப்பட்டது.

த.வெ.க. ஆட்சியில் ரத்து செய்யப்பட்டவை நிறைவேற்றியும், இளைய சமுதாயத்தினர்களுக்கான வேலை வாய்ப்பு மற்றும் வளர்ச்சி திட்டங்களை ரத்து செய்தும் தமிழ்நாட்டை பின்னுக்கு இழுத்துச் செல்கின்றது த.வெ.க.

**சமூகநீதியை காக்கும் கல்வியே திராவிட மாடல் அரசின் பாதை!**

ஆனால், த.வெ.க. அரசு சமூகநீதியைச் சீர்குலைத்து உயர் கல்வியை வணிகமயமாக்க அவசர அவசரமாக சட்டமன்றக் கூட்டத் தொடரின் இறுதி நாளில் தனியார் பல்கலைக்கழகச் சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றிுள்ளது. ‘விக்சித் பாரத் சிக்ஷா அதிஷ்டான் மசோதா’ மூலம் கல்வியை மையப்படுத்தவும் வணிக மயமாக்கவும் முயற்சிக்கும் த.வெ.க. அரசு தமிழ்நாட்டின் கல்வி அமைப்பை மேம்படுத்துவதில் அக்கறையின்றி செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச் சட்டம்) 2026ல், புதிய தனியார் பல்கலைக்கழகங்களைத் தொடங்குவதற்கான குறைந்தபட்ச நிலப்பரப்பு தொடர்பான விதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக சென்னை மாநகராட்சிப் பகுதியில் முன்பு இருந்த 100 ஏக்கர் நிலத் தேவை 12 ஏக்கராகவும், பிற மாநகராட்சிப் பகுதிகளில் 50 ஏக்கரில் இருந்து 18 ஏக்கராகவும், இதர பகுதிகளில் 50 ஏக்கரில் இருந்து 25 ஏக்கராகவும் குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தனியார் பல்கலைக்கழகங்களை தொடங்குவதற்கான அறக்கட்டளை நிதித் தேவையையும் ரூ.50 கோடியிலிருந்து ரூ.25 கோடியாக குறைக்க த.வெ.க. முடிவு செய்துள்ளது.

இந்த மாற்றத்தைப் பார்க்கும்போது, உயர் கல்வி நிறுவனங்களை அதிகப்படுத்துவது மட்டுமே நோக்கமாக இருக்கக் கூடாது என்பது திராவிட முன்னேற்றக் கழகம் முன்வைக்கப்படும் முக்கியமான கேள்வியாகும். பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன், அவற்றின் கல்வித் தரமும், மாணவர்களுக்கு வசதிகளும், ஆசிரியர் தரமும், ஆய்வுத் திறனும், கட்டண அணுகுமுறையும் உறுதி செய்யப்படுகிறதா? என்பதும் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நீண்டகால அரசியலில் கல்வி என்பது சமூக ஏற்றத்தாழ்வுகளை குறைக்கும் மிகப்பெரிய ஆயுதமாகக் கருதப்படுகிறது. குறிப்பாக பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள், கிராமப்புற மாணவர்கள் மற்றும் முதல் தலைமுறை பட்டதாரிகள் உயர்கல்வியை அடைவதற்கு அரசு கல்வி நிறுவனங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. எனவே, தனியார் பல்கலைக்கழகங்களை எளிதாகத் தொடங்குவதோடு, அரசு பல்கலைக்கழகங்களையும் அரசு கல்லூரிகளையும் தொடர்ந்து வலுப்படுத்துவது அவசியமாகிறது.

தனியார் முதலீடு மூலம் கல்வி நிறுவனங்கள் உருவாகலாம் என்றாலும், கல்வி முழுமையாக சந்தை அடிப்படையிலான சேவையாக மாறிவிடக் கூடாது. மாணவர்களின் கல்விக் கனவு அவர்களின் குடும்பத்தின் பொருளாதாரத் திறனைப் பொருத்ததாக மாறாமல் இருப்பதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அவசியம். தனியார் பல்கலைக்கழகங்களில் மாணவர் சேர்க்கை, இடஒதுக்கீடு, கட்டண நிர்ணயம் மற்றும் பின்தங்கிய மாணவர்களுக்கான வாய்ப்புகள் போன்றவை தெளிவான முறையில் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டின் சமூகநீதி மரபை கருத்தில் கொண்டு, எந்த வகையான உயர்கல்வி விரிவாக்கமும் சம வாய்ப்பு மற்றும் சமூக நீதியுடன் இணைந்ததாக இருக்க வேண்டும் என்பதே முக்கியமான வாதமாக தி.மு.க. முன்வைக்கிறது.

அரசுப் பல்கலைக்கழகங்கள் ஏற்கனவே நிதி, உள்கட்டமைப்பு, ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் ஆராய்ச்சி வசதிகள் போன்ற பல சவால்களை எதிர்கொள்கின்றன. எனவே, புதிய தனியார் பல்கலைக்கழகங்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குவதுடன், அரசு உயர்கல்வி நிறுவனங்களின் தரத்தை உயர்த்துவதற்கும் சமமான முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். அரசுக் கல்வி வலுவாக இருந்தால் தான் ஏழை மற்றும் நடுத்தர வர்க்க மாணவர்களுக்கான பாதுகாப்பான உயர்கல்வி வாய்ப்பு உறுதியாகும்.

திராவிட மாடல் அரசின் சிந்தனையில் அணுகுமுறையில், கல்வி வளர்ச்சி என்பது கட்டிடங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையால் மட்டும் அளவிடப்படுவதில்லை. ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த மாணவன் எந்தப் பொருளாதார தடையும் இல்லாமல் உயர் கல்வியை அடைய வேண்டும் என்பதே நமது முக்கிய அளவுகோல். அந்த வகையில், உயர்கல்வியின் விரிவாக்கத்துடன் சமூகநீதி, தரமான கல்வி, கட்டணக் கட்டுப்பாடு மற்றும் அனைவருக்கும் சம வாய்ப்பு ஆகியவையும் இணைந்து செல்ல வேண்டும்.

எனவே, இந்தச் சட்டத் திருத்தத்தைப் பற்றிய விவாதத்தில் “தனியார் பல்கலைக்கழகங்கள் அதிகரிக்கின்றன” என்பதைக் கடந்து, “அவை யாருக்காக? எந்த தரத்தில்? எந்தக் கட்டணத்தில்? எந்த சமூகப் பொறுப்புடன்?” என்ற கேள்விகளும் எழுப்பப்பட வேண்டும். உயர்கல்வி நிறுவனங்களைத் தொடங்குவதற்கான விதிகள் தளர்த்தப்படும்போது, அதே நேரத்தில் மாணவர்களின் உரிமைகளையும் கல்வித் தரத்தையும் பாதுகாக்கும் விதிமுறைகள் வலுப்படுத்தப்பட வேண்டும். கல்வி வணிகமயமாக்குவதை தி.மு.க. மாணவர் அணி வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு கழக மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி கண்டனம் தெரிவித்துள்ளார்.